# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம் (பதிவு எண் 237/84)

எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**


ஊடகச் செய்தி நாள்.20.12.2024

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் **மு. பாஸ்கரன்** மற்றும் பொதுச் செயலாளர் **மு. சீனிவாசன்** ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடகச் செய்தி :

ஊடகச் செய்தி :

## சத்துணவு திட்டமும், சத்து இல்லாத அரசின் கொள்கைகளும்

---

தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-2) துறை, அரசாணை (நிலை) எண்.95, நாள்: 16.12.2024 ன் படி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டத்தின் கீழ் பணிபுரியும் சத்துணவு ஊழியர்களின் பணியிடங்களில் காலியாகவுள்ள பணியிடங்களில் 8,997 சமையல் உதவியாளர் பணியிடங்கள் மட்டும் ரூ.3,000/- தொகுப்பூதியத்தில் நிரப்பப்படும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரிந்துவரும் சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் தங்கள் வாழ்வாதார கோரிக்கையாக காலமுறை ஊதியத்தை அமுல்படுத்தி இந்த ஆட்சி சத்துணவு ஊழியர்கள் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்த்திருந்த நிலையில் மீண்டும் கொத்தடிமை கூலிமுறையில் தொகுப்பூதியத்தில் சத்துணவு சமையல் உதவியாளர்கள் பணியமர்த்தப்படும் என்ற மேற்கண்ட அரசாணை, ஊழியர்கள் மத்தியல் அரசின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

காமராஜர் ஆட்சிக்காலத்தில் கிராமப்புற, அடித்தட்டு குழந்தைகள் பசியார உணவுண்டு கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டுமென மதிய உணவுத்திட்டத்தை தமிழ்நாட்டில் அமுல்படுத்தினார். அதன்பிறகு 1982ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்களுக்கு சத்துணவுத்திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. நாட்டின் மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டின் இத்திட்டத்தை தங்கள் மாநிலத்திலும் அமுல்படுத்தி வருகிறார்கள். அவ்வாறு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக சத்துணவுத்திட்டம் உள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

இத்திட்டம் ஆரம்பிக்கும்போது நாட்டின் கல்வி கற்றவர்களின் விகிதாச்சாரத்தில், மனிதவள மேம்பாட்டில், ஊட்டச்சத்து குழந்தைகள் உள்ள மாநிலங்கள் வரிசையில் தமிழ்நாடு பின்னோக்கி இருந்தது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும், டாக்டர் கலைஞர் அவர்கள் சத்துணவில் முட்டை சேர்க்கப்பட்ட பிறகு இத்திட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேரியது. தற்போது மனிதவளம், கல்விஅறிவு, ஊட்டச்சத்து என எல்லாவற்றிலும் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இதற்கு பிரதான காரணம் இத்திட்டத்தை அமுல்படுத்துவதில் பல்வேறு குறைவாடுகள் இருந்தாலும் சமூக அக்கறையோடு சத்துணவு ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு பணிபுரிந்து வருங்கால சமுதாயம் நல்ல வளமாக சமுதாயமாக உருவாக தன்னலம் பாராது உழைத்து வருகிறார்கள். ஆனால், அவ்வாறு உழைக்கும் சத்துணவு ஊழியர்கள் தங்கள் வாழ்வில் கேள்விக்குறியோடுதான் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் கோரிக்கை வைக்கும் போதெல்லாம் அவர்களை பகுதிநேர ஊழியர்கள் என்று கூறி அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத நிலையில், டாக்டர் கலைஞர் அவர்கள் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பு காலமுறை ஊதியத்தில் அமைப்பாளர்கள் ரூ.7700/-, சமையலர் ரூ.4,100/- சமையல் உதவியாளர் ரூ.3000/- ஊதிய விகிதத்தில் மாற்றம் செய்து நம்பிக்கையை ஏற்படுத்தினார். இந்நிலையல் காலை உணவுத்திட்டத்தை இன்றைய தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போது நாம் முழு நேர ஊழியர்களாக கருதப்படுவோம் என ஆவலோடு எதிர்பாத்து காத்திருந்த நிலையில், அத்திட்டத்தை அவர்களுக்கு வழங்காதது மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. சுமார் ஒட்டுமொத்த பணியிடங்களில் பாதியளவு காலிப்பணியிடங்கள் உள்ளநிலையில் கூடுதல் பணிச்சுமையாக ஏற்றுக்கொண்டு ஊழியர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் மேலும் அவர்களை வஞ்சிக்கும் விதமாக இந்த அரசு மீண்டும் தொகுப்பூதியத்தில் பணியமர்த்த முயற்சிப்பது நம்பிக்கை துரோகமாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கருதுகிறது.

**30.10.2024 நிவலரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் காலிப்பணியிடங்கள் நிலவரம்:**

| வ. எண் | பதவி பெயர் | ஒதுக்கீடு பணியிடம் | பணியாற்றுபவர்கள் | பணியாற்றுபவர்கள் சதவீதம் | காலியிடம் | காலியிடம் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அமைப்பாளர் | 42697 | 23364 | 55% | 19333 | 45% |
| 2. | சமையலர் | 42996 | 33001 | 77% | 9995 | 23% |
| 3 | சமையல் உதவியாளர் | 43006 | 18861 | 44% | 24145 | 56% |
| **மொத்தம்** | | **128699** | **75226** | **58%** | **53473** | **42%** |

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 2021 தேர்தல் காலத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொகுப்பூதிய முறையை ஒழித்து காலமுறை ஊதியம் அமுல்படுத்தப்படும் என தேர்தல் வாக்குறுதியில் அறித்தார். அதன்பிறகு 2021 தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாடு மற்றும் 2022 ஜாக்டோ ஜியோ வாழ்வாதார கோரிக்கை மாநாட்டில் கலந்துகொண்டு இந்த ஆட்சி உங்கள் பேராதரவோடு அமைந்துள்ளது. எனவே, நான் அறித்த வாக்குறுதியை **"மறுக்கவில்லை, மறைக்கவில்லை, மறக்கவில்லை"** என மீண்டு நம்பிக்கையளித்தார். ஆனால், இன்று மேற்கண்ட அரசாணையை அறிவித்தது ஊழியர்கள் மத்தியில் இந்த ஆட்சியின் மீது மிகுந்த ஏமாற்றத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, அரசு மேற்கண்ட அரசாணையை திரும்பப் பெற்று சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களை காலமுறை ஊதியத்தில் வரன்முறைப்படுத்தி காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

தோழர்களே, கடந்த 13.12.2024 மற்றும் 14.12.2024 ஆகிய இரண்டு நாட்கள் தூத்துக்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களை காலமுறை ஊதியத்தில் வரன்முறைப்படுத்திட வேண்டும் என்ற கோரிக்கைளை வலியுறுத்தி ஆறுகட்ட இயக்க நடவடிக்கையை அறைகூவல் தீர்மானமாக ஏகமனதாக நிறைவேற்றியுள்ளோம். அதில் முதல் இயக்க நடவடிக்கையாக வருகிற 27.12.2024 அன்று அனைத்து அலுவலகங்கள் முன்பு ஆர்பாட்டம் நடைபெறவுள்ளது. அதில் நமது கோரிக்கைகளின் வலிமையை இந்த அரசு உணர்ந்துகொள்ளும் விதமாக மிக சக்தியாக பங்கேற்று இந்த அரசுக்கு நமது முழு கண்டனத்தை தெரிவிப்போம்.

**தனிமையிலில்லை, தனிமையிலில்லை**

**சத்துணவு ஊழியர்கள் தனிமையில்லை,**

**ஆதரவளிக்க சங்கம் உண்டு**

**அரசு ஊழியர் சங்கம் உண்டு,**

**தோழமைச்சங்கங்களின் ஆதரவு உண்டு.**

**( மு. பாஸ்கரன் )**
மாநிலத்தலைவர்

**( மு. சீனிவாசன் )**
பொதுச்செயலாளர்